செ.வெ.எண்: 768 நாள்: 30.12.2020

**விராலிமலை ஊராட்சி ஒன்றியத்தில் இதுவரை கண் பரிசோதனை முகாமில் கலந்து கொண்ட 3,435 நபர்களுக்கு கண் கண்ணாடி தேவை.**

**அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் இதுவரை 2,384 நபர்களுக்கு கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளது.**

**ஒளிமயமான வாழ்வு முகாமினை துவக்கி வைத்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

---

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (30.12.2020) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஊராட்சி ஒன்றியம், மேப்பூதகுடியில் CVB அறக்கட்டளை சார்பில் நடத்தப்பட்ட கண் பரிசோதனைக்கான ஒளிமயமான வாழ்வு முகாமினை துவக்கி வைத்து, பார்வையிட்டார்.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

பொது மக்களுக்கு உடல்நிலை சரியில்லை என்றால் உடனடியாக மருத்துவரை அணுகி சிகிச்சை பெறுகின்றனர். இதே போன்று கண்ணில் ஏற்படும் குறைபாடுகளுக்கு உடனடியாக மருத்துவரை அணுகும் வாய்ப்பு குறைவு. குறிப்பாக வயதானவர்கள் கண்சிகிச்சைக்காக மருத்துவமனை செல்லும் சிரமத்தை கருத்தில் கொண்டு CVB அறக்கட்டளையின் சார்பில் கிராமங்கள்தோறும் கண் பரிசோதனைக்கான ஒளிமயமான வாழ்வு முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் இன்றையதினம் விராலிமலை ஊராட்சி ஒன்றியம், மேப்பூதகுடியில் கண் பரிசோதனைக்கான ஒளிமயமான வாழ்வு முகாம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இம்முகாமில் பொது மக்களுக்கு கண் தொடர்பான அனைத்து பரிசோதனைகளும் சிறந்த மருத்துவர்கள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. இதில் அறுவை சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நபர்களுக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளவும், கண்கண்ணாடி தேவைப்படும் அனைவருக்கும் CVB அறக்கட்டளையின் சார்பில் தரமான கண் கண்ணாடிகள் விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது.

இதனை தொடர்ந்து வானத்திரராயன்பட்டி, நம்பம்பட்டி, இராஜாளிப்பட்டி ஆகிய கிராமங்களிலும் கண் பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட உள்ளது. ஏற்கனவே அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 36 ஊராட்சிகளில் நடத்தப்பட்ட கண் சிகிச்சை முகாம்களில் மொத்தம் 13,666 நபர்கள் கலந்து கொண்டனர். இதில் 5,305 நபர்களுக்கு கண் கண்ணாடி தேவை என கண்டறியப்பட்டு இதுவரை 20 ஊராட்சிகளில் 2,384 நபர்களுக்கு CVB அறக்கட்டளையின் சார்பில் தரமான விலையில்லா கண்கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளது. மீதுமுள்ள நபர்களுக்கும் கண்கண்ணாடிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இதில் கண் அறுவை சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய 1,635 நபர்களில் இதுவரை 225 நபர்களுக்கு கண் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதே போன்று விராலிமலை ஊராட்சி ஒன்றியத்தில் இதுவரை 21 ஊராட்சிகளில் நடைபெற்ற கண் சிகிச்சை முகாம்களில் மொத்தம் 6,357 நபர்கள் கலந்து கொண்டனர். இவர்களில் 3,435 நபர்களுக்கு கண் கண்ணாடி தேவை எனவும், 876 நபர்கள் அறுவை சிகிச்சை மேற்கொள்ள வேண்டியவர்கள் எனவும் கண்டறியப்பட்டுள்ளனர். இவர்களுக்கு கண் அறுவை சிகிச்சை மற்றும் விலையில்லா கண் கண்ணாடிகள் வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே பொது மக்களின் இருப்பிடங்களிலேயே நடைபெறும் கண் சிகிச்சை முகாம்களை பொதுமக்கள் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தெரிவித்தார்.

இம்முகாமில் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத் தலைவர் எஸ்.பழனியாண்டி, பொது சுகாதாரத் துணை இயக்குநர் மரு.கலைவாணி, CVB அறக்கட்டளை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**